**තොරතුරු තාක්ෂණ කළමනාකරණ දෙපාර්තමේන්තුව**

தகவல் தொழிநுட்ப முகாமைத்துவ திணைக்களம்

Department of Information Technology Management

ITMD
ENRICHING DIGITAL ECONOMY




# කාර්යසාධන වාර්තාව
# செயலாற்றுத்திறன் அறிக்கை
# Performance Report

# 2025

**මුදල්, ක්‍රමසම්පාදන සහ ආර්ථික සංවර්ධන අමාත්‍යාංශය**

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

Ministry of Finance, Planning and Economic Development

# தகவல் தொழிநுட்ப முகாமைத்துவ திணைக்களம்

## செயலாற்றுத்திறன் அறிக்கை

## 2025

ENRICHING DIGITAL ECONOMY




© 2026 தகவல் தொழிநுட்ப முகாமைத்துவத் திணைக்களம்

செயலகம்,
கொழும்பு 01
இலங்கை

info@itmd.treasury.gov.lk
https://itmd.treasury.gov.lk

Website facebook Whatsapp Channel YouTube LinkedIn

# வருடாந்த செயலாற்றுகை அறிக்கை 2025

தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவத் திணைக்களம
செலவினத் தலைப்பு இலக்கம் 329




01 அத்தியாயம் 01
நிறுவனத்தின் விவரம்.:. நிறைவேற்றுப் பொழிப்பு

02 அத்தியாயம் 02
முன்னேற்றம் மற்றும் எதிர்கால நோக்கு

03 அத்தியாயம் 03
வருடத்துக்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை

04 அத்தியாயம் 04
செயலாற்றுகை சுட்டிகள்

05 அத்தியாயம் 05
நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை (ளுனுபு)அடையும் செயலாற்றுகை

06 அத்தியாயம் 06
மனித வள விவரம

07 அத்தியாயம் 07
இணக்க அறிக்கை

## Abbrivations

| | |
|---|---|
| AD | - Active Directory |
| AD | - Assistant Director |
| ADG | - Additional Director General |
| AI | - Artifical Intelligence |
| AO | - Administrative Officer |
| CII | - Critical Information Infrastructure |
| COPA | - Committee on Public Accounts |
| DD | - Deputy Director |
| DMA | - Department of Managemnt Audit |
| DO | - Development Officer |
| DPI | - Digital Public Infrastruture |
| GFLSM | - Guarantee Fund Loan Settlement Monitoring Systems |
| ICT | - Information & Communication Technology |
| ICTA | - Information and Communication Technology Assistant |
| ICTO | - Information and Communication Technology Officer |
| IP/VPN | - Internet Protocol/ Vertual Private Network |
| IT | - Information Technology |
| ITMD | - Department of Information Technology Management |
| L3 | - Layer 3 |
| LGC | - Lanka Government Cloud |
| MoF | - Ministry of Finance |
| MSO | - Management Servicers Officer |
| NBD | - Department of National Budget |
| NCSOC | - National Cyber security Operation center |
| NFAMS | - Non-Financial Assets Management System |
| NIC | - National Identity Card |
| NOC | - Network Operation Center |
| NPD | - Department of National Planning |
| OES | - Office Employee Service |
| OLMS | - Overseas Leave Management System |
| PC | - Personnel Computer |
| PP&E | - Property, Plant and Equipment |
| UAT | - User acceptance Testing |
| VLAN | - Vertual Local Area Network |
| VM | - Virtual Machine |

# அத்தியாயம் 01
# நிறுவனத்தின் விவரம்/ நிறைவேற்றுப் பொழிப்பு

## 1.1. அறிமுகம்

இலங்கை ஐந்து பிரதான மூலோபாய பரப்புக்களில் கவனம் செலுத்துவதன் மூலம் ஒரு வலுவான டிஜிட்டல் பொருளாதாரத்தை உருவாக்குவதை இலக்காக கொண்டுள்ளது:

- வெளிப்படையான மற்றும் வினைத்திறனான ஆளுகையை உறுதி செய்தல்
- டிஜிட்டல் தொழில்துறையை போட்டித்தன்மையுடன் மேம்படுத்துதல்
- ஒட்டுமொத்த டிஜிட்டல் பொருளாதாரத்தை இயக்குதல்
- மூலோபாய தொழில்துறைகளின் டிஜிட்டல் பரிமாற்றத்தை செயல்படுத்துதல்
- தொழில்துறை, அரசாங்கம் மற்றும் பிரஜைகள் மத்தியில் திறன் மேம்பாட்டை வலுப்படுத்துதல்

இந்த பணி நோக்கிற்கிணங்க, டிஜிட்டல் பொருளாதார வரைவுத் திட்டம், உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்துவதற்கும், உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்கும், பிரஜைகளின் நல்வாழ்வை மேம்படுத்தவதற்கும் ஒரு விரிவான செயல் திட்டத்தை குறிப்பிட்டுக் காட்டுகிறது. இது உலகளாவிய டிஜிட்டல் இணைப்பு, வலுவான பொது டிஜிட்டல் உள்கட்டமைப்பு, மேம்பட்ட டிஜிட்டல் தளங்கள், உள்ளடக்கிய கொள்கைக் கட்டமைப்புகள் மற்றும் இலக்குடைய பொது மற்றும் தனியார் முதலீடுகள் மூலம் அடையப்படுவனவாகும்.

இந்த வழிகாட்டுதலுக்கு இணங்க, 2025 ஆம் ஆண்டில், “டிஜிட்டல் பொருளாதாரத்தை வளப்படுத்துதல்“ என்ற குறிக்கோளுடன், நிதி அமைச்சில் உள்ள தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவத் திணைக்களம் (ITMD) இந்தப் பயணத்தை எளிதாக்குவதற்கு பல முயற்சிகளை மேற்கொண்டது.

• நிதி அமைச்சின் (MoF) அனைத்துத் திணைக்களங்களுக்கும் திறன் மேம்பாடு உள்ளிட்ட செயல்பாட்டுத் தொடர்ச்சி மற்றும் முறைமை ஒருமைப்பாட்டை உறுதி செய்யும் விரிவான தகவல் தொழில்நுட்ப ஆதரவு சேவைகளை வழங்கியது.

• பாதுகாப்பான இணைப்பை மேம்படுத்தி மற்றும் தடையற்ற தகவல் தொடர்பை செயல்படுத்துவதனூடாக எதிர்கால டிஜிட்டல் பரிமாற்ற முயற்சிகளுக்கு ஒரு வலுவான அடித்தளத்தை அமைப்பதன் மூலம் அமைச்சின் வலையமைப்பு உள்கட்டமைப்பை வலுப்படுத்தியது.

• அமைச்சின் தகவல் தொழில்நுட்ப உள்கட்டமைப்பின் மீள்தன்மை மற்றும் செயல்பாட்டு ஒருமைப்பாட்டை உறுதி செய்யும இலக்குடைய முக்கிய வலையமைப்பு மற்றும் மின்சார காப்பு முறைமைகளுக்கான மேம்படுத்தப்பட்ட பாதுகாப்பு நடவடிக்கைகளைச் செயல்படுத்தியது.

• பல்வேறு திறைசேரி திணைக்களங்களுக்கான முறைமை அபிவிருத்தி உள்ளிட்ட, நிதி அமைச்சின் நிறுவனங்களின் சில பணிப்பாய்வுகளை டிஜிட்டல் மயமாக்குதல், ஏனைய அரச நிறுவனங்களுக்கு வழங்கப்படும் சேவைகளின் வெளிப்படைத்தன்மை மற்றும் செயல்திறனை மேம்படுத்துதல்.

• உரிய அரச நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து, முறைமை அபிவிருத்தி, ஒருங்கிணைப்பு மற்றும் தரவுப் பகிர்வு ஆகியவற்றிற்கு வழிகாட்டுதல் வழங்கியது.

## 1.2. நிறுவனத்தின் தொலைநோக்கு , செயற்பணி, குறிக்கோள்

### தொலைநோக்கு

நாட்டின் பொருளாதார அபிவிருத்தியின் பொருட்டு டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட திறைசேரி முகாமைத்துவ முறைமையொன்றை உருவாக்குதல்.

### செயற்பணி

திறைசேரியின் நடவடிக்கைகளை உரிய காலநேரத்திற்கு திட்டமிடுதல்,நடைமுறைப்படுத்துதல், மேற்பார்வைசெய்தல் மற்றும் மதிப்பீடு செய்தல் ஆகியவற்றின் பொருட்டு தீர்மானங்களை மேற்கொள்வதற்கு உதவி செய்வதற்காக திறைசேரி முகாமைத்துவ தொகுதியை டிஜிட்டல் மயப்படுத்துவதற்கு தேவையான வசதிகளை வழங்குதல் மற்றும் கூட்டிணைத்தல்.

### குறிக்கோள

- இ - அரசாங்க எண்ணக்கருவை நிறைவேற்றிக் கொள்வதற்காக பொதுத் திறைசேரியின் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப நடவடிக்கைகளை கூட்டிணைத்தல்.
- காகிதப் பயன்பாடு இல்லாத அலுவலக சூழலை உருவாக்குவதற்கு பயனுள்ள டிஜிட்டல் தொடர்பாடல் அணுகுமுறையை பின்பற்றுதல்.
- வினைத்திறன் மிக்க சேவைகளை வழங்குவதற்கு தேவையான தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முறைமைகளுக்கு தேவையான வசதிகளை செய்தல் மற்றும் முறைமையை அபிவிருத்திசெய்தல்.
- பொதுத் திறைசேரியின் தகவல் தொழில்நுட்ப தொகுதியின் மூலம் தடையின்றி தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவைகளை வழங்குவதனை உறுதிப்படுத்துவதற்கான அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை நவீனமயப்படுத்தல்.
- அமைச்சின் இணையத்தள நுழைவாயில் மற்றும் ஏனைய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முறைமைகளினூடாக பிரஜைகளுக்கு தேவையான தகவல்களை பகிர்ந்து கொள்வதனை உறுதி செய்தல்.

## 1.3. பிரதான பணிகள்

- பல்வேறு நிறுவனங்களில் டிஜிட்டல் மயப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டங்களுக்காக கொள்கைரீதியாக உதவியளித்தல்.
- நிதி அமைச்சுக்கும் அதன் திணைக்களங்களுக்கும் நியம தகவல் தொழில்நுட்பக் கொள்கையொன்றை நடைமுறைப்படுத்துதல்.
- தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப துறைகள் பற்றி பதவியினரின் தேர்ச்சியை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- செயல்முறைகளில் உரிய செயற்பாட்டுக்கு வசதிகளை வழங்குவதற்காக தகவல் தொழில்நுட்ப தொகுதியை திட்டமிடுதல், அபிவிருத்தி செய்தல், நடைமுறைப்படுத்துதல் மற்றும் பராமரித்தல்.
- தேசிய மட்டத்திலான தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முன்னெடுப்புகளுக்காக பங்குதாரர்களுடன் தொடர்பு கொள்ளுதல் மற்றும் கருத்திட்ட வாழ்க்கைச் சுழற்சி முழுவதும் அவர்களுக்கு வசதிகளைச் செய்தல்.
- இணைய பாதுகாப்பை உறுதிசெய்தல்.
- திறைசேரியின் இணையதளத்தினூடாக இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களை வழங்குதல்.
- உரிய நேரத்தில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்.
- தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப வளங்களை சிறந்த முறையில் பயன்படுத்துவதற்குத் தேவையான பராமரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
- தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் தொடர்பான தொழில்நுட்ப பயிற்சி வாய்ப்புகளை வழங்குதல்

## 1.4 Organization Chart




| | | | |
|---|---|---|---|
| ADG | மேலதிக பணிப்பாளர் நாயகம் | DO | அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| DD | பிரதிப் பணிப்பாளர் | ICTA | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப உதவியாளர் |
| AD | உதவிப் பணிப்பாளர் | MSO | முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் |
| AO | நிருவாக உத்தியோகத்தர் | OES | அலுவலகப் பணி உதவியாளர் |
| ICTO | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப உத்தியோகத்தர் | | |

## 1.4. திணைக்களத்தின் பிரதான பிரிவுகள்




## 1.5. திணைக்களத்தின் கீழ் உள்ள நிறுவனங்கள்/ நிதியங்கள் - இல்லை

## 1.6. வெளிநாட்டு உதவி கிடைக்கின்ற கருத்திட்டங்களின் தகவல் (இருக்குமாயின்) – ஏற்புடையதல்ல

# அத்தியாயம் - 02
# முன்னேற்றம் மற்றும் எதிர்கால நோக்கு

தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவத் திணைக்களம், நிதி அமைச்சின்/ பொது திறைசேரியின் தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு வசதிகளை முகாமைசெய்கின்ற அதேவேளையில், பொருளாதாரக் கொள்கைத் தீர்மானங்களை எடுப்பதில் அரசாங்கத்திற்கு உதவுவதற்காக திறைசேரியின் முகாமைத்துவ டிஜிட்டல் மயமாக்கலின் ஒருங்கிணைப்புக்கு வசதியளிப்பது குறித்து பிரதானமாக கவனம் செலுத்துகிறது.

## 2.1 2025 ஆம் ஆண்டில் பெற்ற விஷேட வெற்றிகள்

### 2.1.1 கொள்கை மற்றும் அபிவிருத்தி

❖ **அரச வருமானத் திரட்டில் ஈடுபடுத்தப்படும் தகவல் முறைமைகளின் ஒருங்ககிணைப்பு**

அரசாங்க வருமானத்தை திரட்டுவதில் ஈடுபடுவதற்கு முக்கியமான 13 நிறுவனங்களின் தகவல் தொழில்நுட்ப முறைமைகளை மேம்படுத்துதல் மற்றும் ஒருங்கிணைப்பதினூடாக அரசாங்க வருமானத்தை திரட்டுவதனை வினைத்திறனுடன் மேற்கொள்வதை இலக்காக கொண்டு அரச கணக்குகள் பற்றிய குழுவினால் (CoPA) வழங்கப்பட்ட ஆலோசனைகளின் படி, அந்த தகவல் தொழில்நுட்ப முறைமைகளை ஒருங்கிணைக்கும் ஆற்றல்களை ஆராய்ந்து முன்னேற்றத்தை அறிக்கையிடும் பணியில் தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவ திணைக்களம் ஈடுபட்டது

இத்திணைக்களம், சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் முறைமை ஒருங்கிணைப்புச் செயல்பாடுகளைத் எளிதாக்கி ஒருங்கிணைப்பதற்கு தொடர்வதுடன் வருமானம் ஈட்டும் 13 நிறுவனங்களின் முறைமை ஒருங்கிணைப்பு முயற்சிகளின் முன்னேற்றத்தையும் தொடர்ந்து கண்காணிக்கும். 2025 ஆம் ஆண்டுக்குரிய முன்னேற்ற மீளாய்வு சம்பந்தமான மிக அண்மையில் இடம்பெற்ற கூட்டம், 2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் திறைசேரியின் பிரதிச் செயலாளரின் தலைமையில் டிஜிட்டல் பொருளாதார அமைச்சின் செயலாளர், தொடர்புடைய திணைக்களங்களின் தலைவர்கள், தொழில்நுட்பக் குழுவின் உறுப்பினர்கள் மற்றும் தொடர்புடைய கூட்டிணைப்பு உத்தியோகத்தர்களின் பங்களிப்புடன் இடம்பெற்றது



❖ **திறைசேரி தகவல் அமைப்புகளின் பகுப்பாய்வு மற்றும் டிஜிட்டல் மயமாக்கலை விரைவுபடுத்துதல்**

2024-ஆம் ஆண்டின் பகிரங்க நிதி முகாமைத்துவச் சட்ட இலக்கம் 44-இன் 36 ஆம் பிரிவானது, திறைசேரியின் பணிகளைத் வினைத்திறனாக மேற்கொள்வதற்கு ஒரு செயல்திறன் மிக்க கணினி அமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்று கூறுகிறது. பரிவர்த்தனை நம்பகத்தன்மை, தரவு ஒருமைப்பாடு மற்றும் தோல்விகளின் போதும் துல்லியம் ஆகியவற்றை உறுதிசெய்யும் நான்கு தரவுத்தள உத்தரவாதங்களான அணுக்கோப்பு, நிலைத்தன்மை, தனிமைப்படுத்தல் மற்றும் நீடித்த தன்மை போன்ற பண்புகளைக் கருத்தில் கொண்டு, தரவு இடைவெளிகளைப் பகுப்பாய்வு செய்வதற்கும் பொதுத் திறைசேரியின் டிஜிட்டல் பரிமாற்றத்தை விரைவுபடுத்துவதற்குமான ஒரு முயற்சியாக, 16 திறைசேரித் திணைக்களங்களின் தகவல் முறைமைகளின் விவரங்கள் பெறப்பட்டன.

❖ **திணைக்களம் தொடர்பான ஒழுங்குமுறைகள், வழிகாட்டுதல்கள் மற்றும் செயல் திட்டம்**

தகவல் தொழில்நுட்ப அமைப்புகளை ஒரு முறையான, பாதுகாப்பான மற்றும் வெளிப்படையான முறையில் திட்டமிடுவதற்காக, 2024 ஆம் ஆண்டின் பகிரங்க நிதி முகாமைத்துவச் சட்ட இலக்கம் 44- இன் 36 ஆம் பிரிவுக்கு இணங்க, அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கான ஒழுங்குமுறைகள், வழிகாட்டுதல்கள் மற்றும் ஒரு செயல் திட்டம் ஆகியவை தயாரிக்கப்பட்டு அரச நிதித் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட்டன.

❖ தகவல் தொடர்பாடல் தொழிநுட்பக் கொள்கைகள்

வினைத்திறனான தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பக் கொள்கைகளின் தொகுதி மூலம் பொதுத் திறைசேரியின் டிஜிட்டல் மயமாக்கல் பயணத்தை வலுப்படுத்துவதற்காக, தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவத் திணைக்களம் 13 தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பக் கொள்கைகளின் ஆய்வு மற்றும் வரைவுப் பணியைத் முன்னெடுத்தது.

❖ பங்குதாரர்கள் ஈடுபாடு

உலகளாவிய தகவல் தொழில்நுட்பத் துறையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தலைவர்களுடன் 20க்கும் மேற்பட்ட உயர்மட்டக் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன. இந்தக் கலந்துரையாடல்கள், இற்றைப்படுத்தப்பட்ட அறிவைப் அரச துறையில் உள்வாங்கிக்கொள்வதற்கும், அத்துறையில் உள்ள போட்டிப் போக்குகளுடன் தங்களை இணைத்துக்கொள்வதற்கும் வாய்ப்புகளை வழங்கின.

### 2.1.2 முறைமை அபிவிருத்தி

தகவல் தொழிநுட்ப முகாமைத்துவத் திணைக்கள மென்பொருள் மேம்பாட்டுக் குழுவானது GFLSM ஐ அதிகாரப்பூர்வமாகத் தொடங்கி வைத்து, திறைசேரிக்குள் செயல்பாட்டுத் திறனையும் வெளிப்படைத்தன்மையையும் மேம்படுத்திய இரண்டு முக்கிய டிஜிட்டல் தீர்வுகளை வெற்றிகரமாக வழங்கியது.

❖ உத்தரவாத நிதி கடன் தீர்வு கண்காணிப்பு முறைமையை ஆரம்பித்தல் (GFLSMS)




தடையற்ற, திறமையான மற்றும் வெளிப்படையான கடன் தீர்வு கண்காணிப்பு முறைமையைச் செயல்படுத்துவதன் மூலம் திறைசேரித் திணைக்களத்தின் செயல்பாடுகளுக்கு ஆதரவளிப்பதற்காக இந்த முறைமை உருவாக்கப்பட்டது. இந்த முறைமை 2025 ஆம் ஆண்டு ஜனவரி 06 ஆம் திகதி உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது.

❖ வெளிநாட்டு விடுமுறை முகாமைத்துவ முறைமை (OLMS)




வெளிநாட்டு விடுமுறை ஒப்புதல்களில் ஏற்படும் தாமதங்கள் மற்றும் அலுவலர்களின் விடுமுறை வரலாறுகள் தொடர்பாக மையப்படுத்தப்பட்ட காணுகை நிலை இல்லாமை ஆகியவற்றைச் சரிசெய்வதற்காக, திறைசேரிச் செயலாளரின் வேண்டுகோளின் பேரில் இந்த முறைமை உருவாக்கப்பட்டது. இந்த முறைமை ஒப்புதல் செயல்முறையை நெறிப்படுத்தி, பதிவுகளின் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்தியது. OLMS, 2025 18 செப்டம்பர் அன்று வெற்றிகரமாகத் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

❖ Audit Management System (Xpert Audit) – கணக்காய்வுத் திட்ட உருவாக்கத் தொகுதி




2004 இல் உருவாக்கப்பட்ட Xpert Audit முறைமையில் உள்ள கணக்காய்வுத் திட்ட உருவாக்கத் தொகுதி ளேளம்பாடானது மாற்றப்பட்டது. ஏனெனில் முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்தின் (DMA) இணைப்பானது பூரணப்படுத்தப்பட்டதுடன் பயனர்களின் பாராட்டு பரிசீலனைக்காக (UAT) முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டது.

### 2.1.3 தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப ஆதரவு மற்றும் முன்னெடுப்புக்கள்

❖ சிறந்த செயலாற்றுகைக்கான ஒரு விரிவான கணனி ஆய்வு

தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவத் திணைக்களம் நிதி அமைச்சின் திணைக்களங்கள் முழுவதும் விரிவான கணனி (PC) ஆய்வொன்று நடாத்தியது. இந்த விரிவான ஆய்வானது, தொழிற்பாட்டு முறைமைப் பதிப்புகள் மற்றும் கணணியின பாதுகாப்பு நிலை போன்ற முக்கியமான தொழில்நுட்ப விவரக்குறிப்புகளையும் பதிவு செய்த அதேவளை மேசை கணினிகள், All in One கணினிகள் மற்றும் மடிக்கணினிகள் உள்ளிட்ட அனைத்து கணினிச் சொத்துக்களையும் முறையாக ஆவணப்படுத்தியது. இந்த தந்திரோபாய முன்னெடுப்பானது அமைச்சின் தற்போதைய தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பின் நிலையைத் துல்லியமாகப் பதிவு செய்வதற்கு தகவல் தொழில்நுட்பத் திணைக்களத்திற்கு உதவியது. இதன்மூலம், வன்பொருள் பராமரிப்பு அட்டவணைகள், பாதுகாப்புப் துண்ட (patch) வெளியீடு, வைரஸ் தடுப்பு முகாமைத்துவம் மற்றும் திணைக்களங்கள் முழுவதுமான உகந்த வளப் பங்கீடு ஆகியவற்றிற்கான சான்றுகளின் அடிப்படையிலான தீர்மானமெடுத்தலை இது எளிதாக்கியது. முடிவுகள், தொழில்நுட்ப இடைவெளிகள், பாதுகாப்புக் குறைபாடுகள் மற்றும் உபகரணங்களின் ஆயுட்கால நிலை தொடர்பான பெறுமதிமிக்க பார்வைகளை வழங்கின. இதன் மூலம், செயலூக்கமான தகவல் தொழில்நுட்பச் சொத்து முகாமைத்துவம் மற்றும் தகவலறிந்த வரவுசெலவுத் திட்டமிடலுக்கு இது ஆதரவளித்தது.

திணைக்கள வாரியான கணினிப் பங்கீட்டுச் சுருக்கம் பின்வருமாறு வழங்கப்பட்டுள்ளது. இது, அமைச்சு முழுவதும் உள்ள கணினி வளங்களின் தெளிவான கண்ணோட்டத்தை அளிக்கிறது.




❖ தடையின்றி செயல்படுவதற்காக வன்பொருள் பிரச்சனைகளை தீர்த்தல்

அறிக்கைக் காலத்தின் போது, தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவத் திணைக்களமானது நிதி அமைச்சின் அனைத்துத் திணைக்களங்களுக்கும் விரிவான தகவல் தொழில்நுட்ப ஆதரவு சேவைகளை வழங்குவதிலும், செயல்பாட்டுத் தொடர்ச்சி மற்றும் முறைமை ஒருமைப்பாட்டை உறுதி செய்வதிலும் சிறப்பான செயல்திறனை வெளிப்படுத்தியது. மேலும், தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவத் திணைக்களத்தின் மூலம் கணினி அச்சு இயந்திரம், ஸ்கேனர்கள், நகலெடுக்கும் கருவிகள், ப்ரொஜெக்டர்கள், வலையமைப்பு இணைப்புகள், மின்னஞ்சல் உள்நுழைவுகள் மற்றும் மென்பொருள் செயலிகள் சார்ந்த பிரச்சினைகள் உள்ளிட்ட பாரிய அளவு தொழிநுட்ப பிரச்சினைகளை திணைக்களம் வெற்றிகரமாக தீர்த்துவைத்தது. மேலும் பயனர் அணுகுகை முகாமைத்துவம், கடவுச் சொல்லை மீண்டும் நிறுவுதல், தரவுக் காப்புப்பிரதி பாதுகாப்பு இற்றைபடுத்தல் மற்றும் வைரஸ் பாதுகாப்பு முகாமைத்துவம் ஆகியவை போன்ற முக்கிய முகாமைத்துவ மற்றும் பாதுகாப்பு செயற்பாடுகளை வினைத்திறனாக பேணிவருகின்றது

செயல்திறன் தரவுகளின்படி, தீர்க்கப்பட்ட விடயங்களில் பெரும்பாலானவை இரண்டு முதன்மைப் பிரிவுகளில் அமைந்திருந்தன. இவை ஆண்டு முழுவதும் மூலோபாய வள ஒதுக்கீட்டிற்கு அறிவித்த அச்சு. இயந்திரம், ஸ்கேனர், நகல் பிரதி இயந்திரம் மற்றும் ப்ரொஜெக்டர் சார்ந்த பிரச்சனைகள் மற்றும் கணினி மற்றும் வன்பொருளை சரிசெய்தல் ஆகியவற்றுடன் தொடர்புபட்டவை ஆகும். தொழில்நுட்பச் சவால்களை உடனடியாகக் கண்டறிந்து திறம்படத் தீர்ப்பதன் மூலம், ITMD முறைமைச் செயலிழப்பு நேரத்தைக் கணிசமாகக் குறைத்தது, செயல்பாட்டுத் திறனை மேம்படுத்தியது, மேலும் அமைச்சு முழுவதும் நிதிச் செயல்முறைகள், துறைகளுக்கிடையேயான தொடர்பு மற்றும் மிக முக்கியமான செயல்பாடுகள் தடையின்றி நடைபெறுவதை உறுதி செய்தது. இணைக்கப்பட்டுள்ள வரைபடம், 2025 ஜனவரி முதல் 2025 டிசம்பர் வரையிலான காலகட்டத்தில், அனைத்து சேவைப் பிரிவுகளிலும் தீர்க்கப்பட்ட தீர்க்கப்பட்ட பிரச்சனைகளின் வருடாந்த பரம்பலை தெளிவாக பிரதிபலிக்கின்றது.




***Source: ITMD Help Desk Information***

### ❖ வலையமைப்பு உட்கட்டமைப்பு நவீனமயமாக்கம்

கேள்வி வழங்குவதன் மூலம் வெற்றிகரமாக நிறைவடைந்த 2025 இல் நடாத்தப்பட்ட ஒரு விரிவான பெறுகை செயல்முறையைத் தொடர்ந்து, தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவத் திணைக்களம் (ITMD), அமைச்சு வளாகம் முழுவதும் இருந்த 15 காலாவதியான நில சொடுக்கிகளுக்கு (switch) பதிலாக மேம்பட்ட 3 அடுக்கு (L3) சொடுக்கிகளைப் பொருத்தி ஒரு பெரிய உள்கட்டமைப்பு மேம்படுத்தலை மேற்கொண்டது. இந்த நவீனமயமாக்கல் முயற்சியானது, வலையமைப்பு வேகம், டிராஃபிக் முகாமைத்துவம் மற்றும் இன்டர்-VLAN ரூட்டிங் திறன்களைக் கணிசமாக மேம்படுத்தியது. மேலும், நிதி அமைச்சில் இரண்டு IPVPN சொடுக்கிகள் மூலோபாயமாக நிறுவப்பட்டன. இவை பாதுகாப்பான இணைப்பை வலுப்படுத்தி, வெளிப்புற வலையமைப்புக்களுடன் தடையற்ற தகவல் தொடர்பை சாத்தியமாக்கின. இந்த மேம்படுத்தல்கள் வலையமைப்பு பாதுகாப்பை கணிசமாக மேம்படுத்தி, தாமதத்தைக் குறைத்து, அமைச்சு முழுவதும் எதிர்கால டிஜிட்டல் மாற்ற முயற்சிகளுக்கு ஒரு வலுவான அடித்தளத்தை வழங்கியுள்ளன.

### ❖ பாதுகாப்பு மெம்பாடு : அவசர உட்கட்டமைப்பு மேற்பார்வை

பௌதீகப் பாதுகாப்பை வலுப்படுத்தவும், முக்கிய தகவல் தொழில்நுட்பச் சொத்துக்களைத் தொடர்ச்சியாகக் கண்காணிப்பதை உறுதி செய்யவும், தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவ திணைக்களம் (ITMD) வலையமைப்புச் செயல்பாட்டு மையம் (NOC) மற்றும் UPS அறையில் CCTV கண்காணிப்பு அமைப்புகளை நிறுவியுள்ளது. இந்தப் பாதுகாப்பு மேம்பாடு, இந்த முக்கிய வசதிகளுக்குள் நிகழும் அனைத்து அணுகல்களையும் செயல்பாடுகளையும் நிகழ்நேரத்தில் கண்காணித்து பதிவுசெய்ய உதவுகிறது. இதன்மூலம், பொறுப்புக்கூறல் உறுதி செய்யப்படுகிறது, அங்கீகரிக்கப்படாத நுழைவு தடுக்கப்படுகிறது, மேலும் சம்பவங்களுக்கு விரைவாகப் பதிலளிக்கவும் வழிவகை செய்யப்படுகிறது. இந்த நிறுவகையானது, மிக முக்கியமான வலையமைப்பு உபகரணங்கள் மற்றும் மின்சார காப்பு அமைப்புகளுக்கு ஒரு கூடுதல் பாதுகாப்பு அடுக்கை வழங்குகிறது. இதன்மூலம், அமைச்சின் தகவல் தொழில்நுட்ப உள்கட்டமைப்பின் செயல்பாட்டு ஒருமைப்பாட்டைப் பாதுகாக்கிறது.

### 2.1.4 திறன் விருத்தி – Friday Forum

இந்தத் திணைக்களம் மற்றும் திறைசேரியில் உள்ள அதிகாரிகளின் தொழில்நுட்ப அறிவையும் நடைமுறைப் பயன்பாட்டுத் திறன்களையும் மேம்படுத்துவதற்காக 2024-ல் ஆரம்பிக்கப்பட்ட Friday Forum நிகழ்ச்சி, 2025-ஆம் ஆண்டில் தனது இலக்கு மைல்கற்களை வெற்றிகரமாகக் கடந்தது. இந்த வெற்றிக்கு முதன்மைக் காரணிகளாக, காலத்திற்கு ஏற்ற மற்றும் பொருத்தமான தலைப்புகளைத் தேர்ந்தெடுத்தல், உயர் திறன் வாய்ந்த வளவாளர்களின் ஒத்துழைப்பு, மற்றும் "ITMD Techo" யூடியூப் ஊடகம் வழியாக அமர்வுகளைத் திட்டமிட்டு விளம்பரப்படுத்தி, அவற்றை அதிக எண்ணிக்கையிலான பயனர்கள் காணும்படி செய்தல் ஆகியவை அமைந்தன. மேலும், நிகழ்ச்சிகளைத் தேர்ந்தெடுக்கும்போது அதிகாரிகளின் உண்மையான தேவைகளைக் கண்டறிந்து, அவற்றைச் செயல்படுத்தும்போது நடைமுறைப் பொருத்தத்தை உறுதிசெய்ததன் மூலம், இந்த அமர்வுகள் அரச அதிகாரிகளிடையே குறிப்பிடத்தக்க பிரபலத்தைப் பெற்றன.

“ITMD Techo” யூடியூப் ஊடகம் இன்றுவரை அடைந்துள்ள முன்னேற்றம், பின்வரும் தரவுப் பகுப்பாய்வில் தெளிவாகப் பிரதிபலிக்கிறது.







Introduction to the Resilient DC White Paper
Questions
&
Answers
WAYS TO
ITMD
ENRICHING DIGITAL ECONOMY
FRIDAY
FORUM

2025 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள்

| இல | நிகழ்ச்சித் திட்டத்தின் பெயர் | பங்குபற்றிய உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | இலங்கையில் தகவல் தொழிநுட்ப கருத் திட்டங்கள் | 135 |
| 02 | டிஜிட்டல் பொது உட்கட்டமைப்பு (DPI) மற்றும் நவீன ஆளுகையில் அதன் பங்கு | 59 |
| 03 | இந்தியாவின் அனுபவம் தொடர்பான இலக்குடன் தகவல் தொழிநுட்ப துறையில் அண்மைய போக்கு | 29 |
| 04 | சைபர் பாதுகாப்பு விழிப்புணர்வு மற்றும் சிறந்த நடைமுறைகள் | 114 |
| 05 | Unlock the Power of M365: உற்பத்தித்திறன் மற்றும் ஒத்துழைப்பை மேம்படுத்துதல் | 51 |
| 06 | உங்கள் டிஜிட்டல் உலக பாதுகாப்பு: ஒரே திரையில் ஒருங்கிணைந்த பாதுகாப்பு | 83 |
| 07 | பாதுகாப்பான, விரிவாக்கக்கூடிய மற்றும் திறன்மிகு தீர்வுகள் ஆகிய டீஜிட்டல் பரிமாற்றத்தின் ஊடாக அரசாங்கத்தை வலுப்படுத்துதல் | 89 |
| 08 | உலகின் மிகவும் மேம்பட்ட AI/ML அடிப்படையிலான சைபர் பாதுகாப்பு தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி டிஜிட்டல் சொத்துக்களைப் பாதுகாத்தல் | 64 |
| 09 | முழுமையான தரவுப் பயணம் | 94 |
| 10 | சுயதன்மை உடைய செயற்கை நுண்ணறிவு யுகத்தில் பிரஜைகளை மையமாகக் கொண்ட அரசாங்கத்தை நோக்கி | 35 |
| 11 | அரச துறையில் தகவல் தொழிநுட்ப பெறுகையில் வடிவமைப்பு மூலாபாயங்கள் மூலம் சமநிலைப் பாதுகாப்பை மாற்றுதல் | 150 |
| 12 | மீள்திறன் கொண்ட தரவு மையத்தை உருவாக்குதல் – செயற்கை நுண்ணறிவு யுகத்தில் மீள்திறன் கொண்ட தரவு மையங்களின் மூலோபாயத் தேவை | 142 |
| 13 | AI கருவிகள் | 30 |
| 14 | மின்னியல் ஊதிய மீளாய்வு அமர்வு | 29 |
| 15 | வரைபட வடிவமைப்பின் அடிப்படை கொள்கை | 34 |
| 16 | வடிவமைப்பு கருவிகள் Adobe Photoshop – Part 01 | 38 |
| 17 | தகவல் முறைமை பெறுகை | 155 |
| 18 | உத்தரவாத நிதிய கடன் தீர்வை கண்காணிப்பு முறைமை | 32 |
| 19 | BID மதிப்பீடு | 221 |
| 20 | இலங்கையில் பொருளாதார மீட்புக்காக பொதுக் கருத் திட்ட விநியோகத்தை பரிமாற்றுதல் | 284 |
| 21 | AI Powered Productivity – Simple Ways to Transform Daily Office Tasks Easier | 685 |
| 22 | Scroll Smart: சமூக ஊடகங்கள் மற்றும் செய்திப் பரிமாற்ற செயலிகளில் பாதுகாப்பாக இருத்தல் | 121 |

❖ ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்கான திறன் விருத்தி செயற்பாடுகள்

திணைக்களத்தின் திறன் விருத்தி முன்னெடுப்புகளின் ஒரு பகுதியாக, பிற அரச நிறுவனங்களில் பணியாற்றும் அரசாங்க அலுவலர்களின் அறிவையும் திறன்களையும் மேம்படுத்தும் நோக்கில், "Friday Forum" நிகழ்ச்சித் திட்டம் அந்த நிறுவனங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது. இத்திட்டங்கள் அவர்களின் கோரிக்கையின் பேரில் நடத்தப்படுகின்றன.

இத்தகைய முதல் பயிற்சித் திட்டம், கரந்தெனிய பிரதேச செயலக வளாகத்தில் ஒரு களப் பயிற்சி அமர்வாக நடத்தப்பட்டது. அதே நேரத்தில், இத்திட்டம் ITMD Techo யூடியூப் அலைவரிசை வழியாக நேரலையாக ஒளிபரப்பப்பட்டது. இது, நிகழ்விடத்தைத் தாண்டியும் பரந்த பங்கேற்பையும் அணுகலையும் சாத்தியமாக்கியது. இந்த முன்னெடுப்பு, நிறுவனங்களுக்கு இடையேயான ஒத்துழைப்பை வலுப்படுத்தவும், திணைக்களத்தின் அறிவுப் பகிர்வு முயற்சிகளின் அடைவை விரிவுபடுத்தவும் பங்களித்தது.



## 2.2 எதிர்கால நடவடிக்கைகள்

நிதி அமைச்சில் சாதகமான டிஜிட்டல் பணிச்சூழலை ஏற்படுத்துவதற்காக, இத்திணைக்களம் எதிர்காலத்தில் பின்வரும் செயல்பாடுகளை நிறைவேற்றத் திட்டமிட்டுள்ளது.

### ❖ இறுதிப் -பயனர் கருவி நவீனமயமாக்கம்

நவீன பயன்பாடுகள் மற்றும் பாதுகாப்புத் தரங்களுடன் இணக்கத்தன்மையை உறுதி செய்வதற்காக, நிதி அமைச்சு, தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவத் திணைக்களத்தின் ஆதரவுடன், திறைசேரி மற்றும் அதன் திணைக்களங்கள் முழுவதும் உள்ள சுமார் 1,000 காலம்கடந்த மடிக்கணினிகள் மற்றும் மேசைக்கணினிகளை மாற்றத் திட்டமிட்டுள்ளது. இந்தச் செயல்பாட்டில் தரப்படுத்தப்பட்ட இயக்க முறைமையை நிறுவுதல், தேவையான உற்பத்தித்திறன் மற்றும் வணிகப் பிரிவு மென்பொருட்களை நிறுவுதல், செயற்படு கோப்பகத்துடன் (AD) ஒருங்கிணைத்தல், பயனர் சுயவிவர உள்ளமைவு மற்றும் நிறுவனத்தின் தகவல் தொழில்நுட்பக் கொள்கைகளை அமுல்படுத்துதல் ஆகியவை அடங்கும். இந்த நவீனமயமாக்கல் முயற்சியானது, கணினி அமைப்பின் நம்பகத்தன்மையை கணிசமாக மேம்படுத்தும், வன்பொருள் செயலிழப்புகளைக் குறைக்கும், பயனர் உற்பத்தித்திறனை அதிகரிக்கும், மேலும் திறைசேரிச் செயல்பாடுகள் மற்றும் அன்றாட நிர்வாக நடவடிக்கைகளுக்குத் தடையற்ற ஆதரவை உறுதி செய்யும்.

### ❖ முடிவுமுனை மற்றும் வழங்கிப் பாதுகாப்பு மேம்பாடு

ஒட்டுமொத்த இணையப் பாதுகாப்பு நிலையை வலுப்படுத்ததுவதற்காக நிதி அமைச்சு மற்றும் அதன் திணைக்களங்கள் முழுவதும் மேம்பட்ட முடிவுமுனை மற்றும் வழங்கி பாதுகாப்புத் தீர்வுகள் செயல்படுத்தப்படும். இதில், நிகழ்நேர அச்சுறுத்தல் கண்டறிதல், தீம்பொருள் பாதுகாப்பு மற்றும் கொள்கை அடிப்படையிலான பாதுகாப்புக் கட்டுப்பாடுகளுடன் கூடிய ஒரு மையப்படுத்தப்பட்ட வைரஸ் தடுப்பு மற்றும் முடிவுமுனை பாதுகாப்புத் தளத்தை நிறுவுவதும் அடங்கும். இந்தத் தீர்வானது திறைசேரிக் கணினிகள், மடிக்கணினிகள் மற்றும் முக்கிய வழங்கிகளை உள்ளடக்கி, மையப்படுத்தப்பட்ட கண்காணிப்பு, சம்பவங்களுக்குப் பதிலளித்தல் மற்றும் தேசிய தகவல் பாதுகாப்புத் தரநிலைகளுக்கு இணங்குதல் ஆகியவற்றைச் சாத்தியமாக்கும். இந்த முயற்சி, இணைய அச்சுறுத்தல்கள், தரவு மீறல்கள் மற்றும் அரச முறைமைகளுக்கான அங்கீகரிக்கப்படாத அணுகல் ஆகியவற்றின் அபாயத்தைக் குறைக்கும்.

### ❖ வலையமைப்பு உட்கட்டமைப்பு மேம்பாடு

பழைய வலையமைப்பை நவீன, உயர் செயல்திறன் மற்றும் பாதுகாப்பான நெட்வொர்க் உபகரணங்களைக் கொண்டு மேம்படுத்துவதன் மூலம், தற்போதுள்ள வலையமைப்பு உள்கட்டமைப்பு வலுப்படுத்தப்படும். இந்த மேம்படுத்தல், அலைவரிசைத் திறன், வலையமைப்பு நிலைத்தன்மை மற்றும் தவறு தாங்கும் திறனை மேம்படுத்துவதோடு, திணைக்களங்கள் முழுவதும் பாதுகாப்பான தரவுப் பரிமாற்றத்திற்கும் ஆதரவளிக்கும். இந்தச் செயல்பாடு, உளளக முறைமைகள் திணைக்களங்களுக்கிடையேயான தொடர்பு மற்றும் எதிர்கால டிஜிட்டல் சேவைகளுக்கு நம்பகமான இணைப்பை உறுதி செய்வதோடு, வளர்ந்து வரும் செயல்பாட்டுத் தேவைகளுக்கு ஆதரவளிக்க சிறந்த வலையமைப்பு முகாமைத்துவம், கண்காணிப்பு மற்றும் விரிவாக்கத் திறனையும் செயல்படுத்தும்.

### ❖ மெய்நிகராக்கச் சூழ்நிலை மேம்பாடு

சிறந்த முறைமை செயல்திறன், உயர் கிடைப்புத்தன்மை மற்றும் திறமையான வளப் பயன்பாடு ஆகியவற்றை ஆதரிக்கும் வகையில் தற்போதைய மெய்நிகர் இயந்திர (VM) உள்கட்டமைப்பு மேம்படுத்தப்படும். முக்கிய செயலிகளை மிகவும் திறம்பட செய்வதற்காக, ஹைப்பர்வைசர்கள், சேமிப்பகம் மற்றும் மெய்நிகராக்க முகாமைத்துவக் கருவிகளை மேம்படுத்துவதும் இதில் அடங்கும். இந்த மேம்படுத்தப்பட்ட மெய்நிகராக்கச் சூழலானது, அமைப்புச் செயலிழப்பு நேரத்தைக் குறைத்து, பயன்பாடுகளின் பதிலளிப்புத் திறனை மேம்படுத்தி, பேரிடர் மீட்புத் திறன்களை ஆதரித்து, தற்போதுள்ள மற்றும் எதிர்கால அரசாங்க அமைப்புகளை செயற்படுத்துவதற்கு விரிவாக்கக்கூடிய ஒரு அடித்தளத்தை வழங்கும்.

### ❖ Government Cloud பெயர்ச்சி (LGC)

தேசிய தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்பக் கொள்கைகளுக்கு இணங்க, பாதுகாப்பான, விரிவாக்கக்கூடிய மற்றும் நீடித்த முறைமை வழங்களை உறுதி செய்வதற்காக, தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்புகள் இலங்கை அரசின் மேகக்கணிமை சேவைக்கு (LGC) மாற்றப்படும். இந்தச் செயல்பாட்டில் முறைமை மதிப்பீடு, இடமாற்றத் திட்டமிடல், தரவுப் பரிமாற்றம், சோதனை மற்றும் தரவு இடமாற்றத்திற்குப் பிந்தைய சோதனை ஆகியவை அடங்கும். அரசின் மேகக்கணிமைக்கு மாறுவது, அமைப்பின் கிடைக்கும் தன்மை, செயல்திறன் மற்றும் பாதுகாப்பை மேம்படுத்துவதோடு, நீண்டகால உட்கட்டமைப்புச் செலவுகளையும் குறைக்கும். மேலும் இது அரச துறையில் மையப்படுத்தப்பட்ட ஆளுகை, இணக்கம் மற்றும் எதிர்கால டிஜிட்டல் உருமாற்ற முயற்சிகளுக்கு ஆதரவளிக்கும்.

❖ தேசிய சைபர் பாதுகாப்பு மையத்திற்கு இணைத்தல் (NCSOC)

தேசிய இணையப் பாதுகாப்புச் செயல்பாட்டு மையத்தின் (NCSOC) பிரதான நோக்கம், முக்கிய தகவல் உட்கட்டமைப்பு (CII) அமைப்புகள் மற்றும் பிற அரசாங்க நிறுவனங்களுக்கு விரிவான இணையப் பாதுகாப்பு கண்டறிதல், கண்காணிப்பு மற்றும் சம்பவப் பதிலளிப்புச் சேவைகளை வழங்குவதாகும். இலங்கை CERT-ஆல் நடத்தப்பட்ட ஒரு தேசிய CII கணக்கெடுப்பைத் தொடர்ந்து, தொழில்நுட்ப அமைச்சின் செயலாளரால் 2023 மே 02-ஆம் தேதி வெளியிடப்பட்ட சுற்றறிக்கை இலக்கம் MOT/2023/01-இன் கீழ் தெரிவிக்கப்பட்டுள்ளபடி, நிதி அமைச்சு ஒரு CII அமைப்பாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

❖ நிதியல்லா சொத்து முகாமைத்துவ் (NFAMS) தளத்தின் Structural Asset Module

2026 ஆம் ஆண்டுக்கான அரசாங்கத்தின் டிஜிட்டல் மயமாக்கல் கொள்கைக்கு இணங்க, நிலுவையில் உள்ள ITMIS தொகுதிகள் செயல்படுத்தப்படும் வரை, திணைக்களங்களுக்கு தகவல் தொழிநுட்ப முகாமைத்துவ திணைக்களம் ஆதரவு சேவைகளைத் தொடங்கியுள்ளது. தற்போது பயனர்களின் ஏற்றுக்கொள்ளும் பரிசீலனைக்கு (UAT) உட்படுத்தப்பட்டுள்ள நிதிசாரா சொத்து முகாமைத்துவ முறைமையின் (NFAMS) கட்டமைப்புச் சொத்துத் தொகுதியானது, செயல்படுத்தப்பட்டு நேரலைக்கு செல்ல திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், மீதமுள்ள NFAMS தொகுதிகளான கட்டிடம், இயந்திரத் தொகுதிகள் மற்றும் தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் ஆகியவை இந்த ஆண்டிற்குள் செயற்படுத்தப்பட உள்ளன.

❖ உள்ளக கணக்காய்வு முகாமைத்துவ முறைமை – கணக்காய்வு முகாமைத்துவ திணைக்கள இணைப்பு

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்காக உருவாக்கப்பட்டு, DMA Connect என மறுபெயரிடப்பட்ட உள்ளகத் கணக்காய்வு முகாமைத்துவ அமைப்பு, 2026-ஆம் ஆண்டில் நிறைவுசெய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த அமைப்பின் முதல் கட்டமான, கணக்காய்வுத் திட்ட உருவாக்கம், ஏற்கனவே உருவாக்கப்பட்டுள்ளது. முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தால் சமர்ப்பிக்கப்பட்ட மாற்றக் கோரிக்கைகளின் அடிப்படையில், அடுத்தகட்டங்களுக்குச் செல்வதற்கு முன்னர், இந்தக் கட்டத்திற்கான மேம்படுத்தும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

❖ மைக்ரோசொப்ட் 365 ஐ பயன்படுத்துதல்

நிதி அமைச்சு, தற்போதுள்ள நிறுவன பிரிவில் உள்ள மைக்ரோசா.ஃப்ட் எக்ஸ்சேஞ்ச் மின்னஞ்சல் சூழல், அலுவலக உற்பத்தித்திறன் கருவிகள், மற்றும் செயற்படு தொடர்பகம், ஒருங்கிணைக்கப்பட்ட பயனர் கணக்குகள் ஆகியவற்றை மைக்ரோசா.ஃப்ட் 365-க்கு மாற்றும் பணியில் ஈடுபட்டுள்ளது. அதே சமயம், தற்போதைய உள்ளக கோப்புப் பகிர்வு உள்கட்டமைப்பு, மைக்ரோசா.ஃப்ட் ஷேர்பாயிண்ட் ஆன்லைன் மற்றும் OneDrive ஆகியவற்றுக்கு மாற்றப்பட்டு வருகிறது. இது மையப்படுத்தப்பட்ட, பாதுகாப்பான மற்றும் கட்டுப்படுத்தப்பட்ட ஆவண நிர்வாகத்தை சாத்தியமாக்குகிறது.

இந்த முயற்சி, அமைச்சின் தகவல் தொழில்நுட்பத் திறன்களை பின்வருமாறு கணிசமாக வலுப்படுத்தும்:

• கிளவுட் அடிப்படையிலான அடையாள முகாமைத்துவம், பல காரணி உறுதிப்பாடு மற்றும் உள்ளமைக்கப்பட்ட தரவுப் பாதுகாப்பு கட்டுப்பாடுகள் மூலம் பாதுகாப்பை மேம்படுத்துதல்.

• Microsoft Teams, SharePoint, and cloud-enabled Office போன்ற நவீன கருவிகள் மூலம் ஒத்துழைப்பு மற்றும் உற்பத்தித்திறனை மேம்படுத்துதல்.

• பழைய உள்ளக உள்கட்டமைப்பைச் சார்ந்திருப்பதைக் குறைத்து, செயல்பாட்டு மற்றும் பராமரிப்புச் செலவுகளைக் குறைத்தல்.

• வணிகத் தொடர்ச்சி மற்றும் விரிவாக்கத்தன்மையை உறுதிசெய்யும் அதே வேளையில், கலப்பு மற்றும் தொலைநிலை பணி மாதிரிகளை ஆதரித்தல்.

• அரசாங்கத்தின் தகவல் தொழில்நுட்ப நவீனமயமாக்கல் நோக்கங்களுடன் இணைந்த, எதிர்காலத்திற்குத் தயாரான, இணக்கமான மற்றும் மீள்திறன் கொண்ட ஒரு டிஜிட்டல் தளத்தை நிறுவுதல்.

மைக்ரோசா.ஃப்ட் 365 செயலாக்கம் என்பது அமைச்சின் டிஜிட்டல் மாற்றப் பயணத்தில் ஒரு முக்கிய மைல்கல்லாக விளங்குவதோடு, எதிர்கால தகவல் தொழில்நுட்ப முன்னெடுப்புகளுக்கு ஒரு வலுவான அடித்தளத்தையும் வழங்குகிறது.

M.M.C.P. Mohottigedara
Director General
Department of Information Technology Management
Ministry of Finance, The Secretariat, Colombo 01.

எம் எம் சீ பீ மோஹோட்டிகெதர

பணிப்பாளர் நாயகம்

தகவல் தொழிநுட்ப முகாமைத்துவ திணைக்களமம

# அத்தியாயம் -03
## 2025 டிசம்பர் 31 முடிவுற்ற வருடத்துக்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை

### 3.1 நிதிச் செயலாற்றுகை பற்றிய கூற்று

ஏசிஏ -எப்

2025 டிசம்பர் 31ல் முடிவடைந்த (ஆண்டுக்கான)
நிதிச் செயலாற்றுகைக் கூற்று

| திருத்தப்பட்ட ஒதுக்கீடு 2025 ரூபா. | | குறிப்பு | உண்மை நிலை 2025 ரூபா. | 2024 ரூபா. | |
|---|---|---|---|---|---|
| - | வருமானவரி | 1 | - | - | ஏசிஏ -1 |
| - | பொருட்கள் மற்றும் சேவைகள் மீதானவரி | 2 | - | - | ஏசிஏ -1 |
| - | சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள் | 3 | - | - | ஏசிஏ -1 |
| - | வரியல்லாத வருமானங்களும் ஏனையவையும் | 4 | - | - | ஏசிஏ -1 |
| - | **மொத்த வருமானப் பெறுகைகள் (அ)** | | - | - | |
| - | **வருமானமற்ற பெறுகைகள்** | | - | - | |
| - | திறைசேரி கட்டுநிதி | | 185,181,000 | 1,134,871,000 | ஏசிஏ -3 |
| - | வைப்புகள் | | 1,426,848 | 1,879,126 | ஏசிஏ -4 |
| - | முற்பணக் கணக்குகள் | | 4,577,946 | 3,626,998 | ஏசிஏ -5 |
| - | ஏனைய பிரதான பேரேட்டு கணக்கின் பெறுகைகைள் | | | 2,515,420 | |
| - | **மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ)** | | **191,185,794** | **1,142,892,544** | |
| | **மோத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் அல்லாத பெறுகைகளும் இ=(அ+ஆ)** | | **191,185,794** | **1,142,892,544** | |
| | **திறைசேரிக்கான அனுப்பீடுகள் (ஈ)** | | 41,227 | 546,202 | |
| - | **தேறிய வருமானம் கிடைப்பனவு மற்றும் வருமானம் அல்லாத கிடைப்பனவு உ=(இ+ஈ)** | | **191,144,567** | **1,142,346,342** | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | **கழி செலவீனம்** | | | | |
| - | **மீண்டுவரும் செலவீனம்** | | | | |
| 72,420,000 | சம்பளம் கூலி மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள் | 5 | 68,614,998 | 53,226,906 | |
| 480,000 | **மானியங்கள் கொடைகள் மாற்றல்கள்** | 7 | 429,516 | 460,016 | **ஏசிஏ -2(ii)** |
| - | **வட்டிக் கொடுப்பனவுகள்** | 8 | - | - | |
| - | **ஏனைய மீண்டுவரும் செலவீனம்** | 9 | - | - | |
| **382,370,000** | **மொத்த மீண்டுவரும் செலவீனம் (F)** | | **181,352,704** | **1,127,567,160** | |
| | **மூலதனச் செலவீனம்** | | | | |
| - | மூலதனச் சொத்துக்களின் புனரமைப்பும் மேம்படுத்தலும் | 10 | - | 4,478,519 | |
| 190,500,000 | மூலதன சொத்துக்களின் கொள்வனவு | 11 | 4,491,543 | 4,035,017 | |
| - | மூலதன மாற்றல்கள் | 12 | - | - | **ஏசிஏ -2(ii)** |
| - | நிதிச் சொத்துக்களின் கொள்வனவு | 13 | - | - | |
| 1,500,000 | திறன் அபிவிருத்தி | 14 | 1,379,500 | 817,950 | |
| - | **ஏனைய மூலதனச் செலவீனங்கள்** | 15 | - | - | |
| **192,000,000** | **மொத்த மூலதனச் செலவீனம் (G)** | | **5,871,043** | **9,331,486** | |
| | வைப்புக் கொடுப்பனவுகள் | | 2,181,714 | 1,328,981 | **ஏசிஏ -4** |
| | மூலதனக் கொடுப்பனவுகள | | 6,193,260 | 4,324,016 | **ஏசிஏ -5** |
| | ஏனைய பிரதான பேரேட்டுச் செலவீனம் | | - | - | |
| | மொத்த பிரதான பேரேட்டுச் செலவீனம் **(H)** | | **8,374,974** | **5,652,997** | |
| | மொத்த செலவீனம் **I = (F+G+H)** | | 195,598,721 | **1,142,551,643** | |
| | **டிசம்பர் 31ல் உள்ளவாறு மீதி b = (E-I)** | | (4,454,154) | - (205,301) | |
| | **பணிமுற்பணா சரிப்படுத்தல் அறிக்கையின் படி மீதி** | | (4,454,154) | (205,301) | **ஏசிஏ -7** |
| | **டிசம்பர் 31ல் உள்ளவாறான கட்டுநிதி மீதி** | | - | - | **ஏசிஏ -3** |
| | | | - | - | |

**ஏசிஏ-5பி**

## 3.2 நிதி நிலைமை பற்றிய கூற்று

ஏசீஏ -பீ

2025 டிசம்பர் 31 இல் உள்ளவாறான
நிதி நிலைமைக் கூற்று

| | குறிப்பு | உண்மை நிலை 2,025 ரூபா | 2,024 ரூபா |
|---|---|---|---|
| **நிதி சொத்துக்கள் அற்றது** | | | |
| ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம் | ஏசீஏ-6 | 61,053,508 | 55,476,826 |
| **நிதி சொத்துக்கள்** | | | |
| முற்பணக் கணக்குகள் | ஏசீஏ-5.∴5ஏ | 8,858,129 | 7,242,815 |
| காசு மற்றும் காசுக்குச் சமனானவை | ஏசீஏ-3 | - | - |
| மொத்த சொத்துக்கள் | | **69,911,637** | **62,719,641** |
| **தேறிய சொத்துக்கள் ∴ உரிமைப் பங்கு** | | | |
| திறைசேரிக்கு தேறிய சொத்துக்கள் | | 8,658,129 | 6,287,949 |
| ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம் | | 61,053,508 | 55,476,826 |
| வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம் | ஏசீஏ-5பீ | | |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| வைப்புக் கணக்குகள் | ஏசீஏ-4 | 200,000 | 954,866 |
| தீர்க்கப்படாத பணிமுற்பண மீதி | ஏசீஏ-3 | - | - |
| மொத்தப் பொறுப்புக்கள் | | **69,911,637** | **62,719,641** |

பக்க இலக்கம் 08 முதல் 23 வரை ஏசீஏ 1 முதல் ஏசீஏ 7 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின்∵பின்னிணைப்புகளின் பக்க இலக்கம் 24 முதல் 29 வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். 2025 ஆம் ஆண்டின் 17.12.2025 திகதியிடப்பட்ட இல 02∵2025 அரச கணக்குகள் விதிமுறைகள் மற்றும் அரச நிதி விதிமுறைகள் 150 மற்றும் 151 ஆகியவற்றின் தேவைகளுக்கு ஏற்ப நிதி நிலைமைக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்
பெயர்:
பதவி :
திகதி : 24/02/2026
Dr. Harshana Suriyapperuma
Secretary to the Treasury and Secretary to the Ministry of Finance, Planning and Economic Development
Ministry of Finance
Colombo 01

கணக்கீட்டு உத்தியோகத்தர்
பெயர்:
பதவி :
திகதி : 20/02/2026
Wimal S.K. Liyanagama
Director General *(Cover up Duties)*
Department of Information Technology Management
Ministry Of Finance, Planning and Economic Development
The Secretariat, Colombo 01

பிரதான நிதி உத்தியோகத்தர்∴ பிரதான பணிப்பாளர்(நிதி)∵ஆணையாளர்(நிதி)
பெயர் :
திகதி : 19/02/2026
D. P. Gnanendra Pradeep
Director (Finance)
Department of Information Technology Management
Ministry of Finance, Economic Stabilization and National Policies
The Secretariat, Colombo 01.

2

Public

## 3.3 காசுப் பாய்ச்சல் கூற்று

ACA-C

2025 டிசம்பர் 31ல் உள்ளவாறான

காசுப்பாய்ச்சல் கூற்று

| | உண்மை | |
|---|---|---|
| | **2025**<br>ரூபா. | **2024**<br>ரூபா. |
| <u>தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்</u> | | |
| மொத்த வரிப் பெறுகைகள் | - | - |
| கட்டணங்கள் தண்டப்பணங்கள் தண்டனைகள் மற்றும் உத்தரவுப் பத்திரங்கள் | - | - |
| இலாபம் | - | - |
| வருமானம் அல்லாத பெறுகைகள் | - | - |
| ஏனைய வருமான தலைப்புகளுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம் | 4,303,656 | 2,515,420 |
| பெறப்பட்ட கட்டுநிதி | 185,181,000 | 1,134,871,000 |
| முற்பணங்களை அறவிடல் | 5,148,137 | 3,928,680 |
| வைப்புகளின் பெறுகை | 1,426,848 | 1,879,126 |
| செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்த காசு **(A)** | **196,059,641** | **1,143,194,226** |
| <u>கழி- பகிர்ந்தளிக்கப்பட்ட காசு</u> | | |
| ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாட்டுக் கொடுப்பனவுகள் | 180,778,763 | 1,126,941,494 |
| மானியங்களும் மாற்றுக் கொடுப்பனவுகளும் | 429,516 | 460,016 |
| மூலதனச் சொத்துக்களின் புனரமைப்பு மற்றும் மேம்பாடு, மூலதனப் பரிமாற்றங்கள், திறன் மேம்பாடு மற்றும் இதர மூலதனச் செலவினங்கள் | | |
| ஏனைய செலவுத் தலைப்பு சார்பாக ஏற்பட்ட செலவினம் | 564,118 | 262,031 |
| திறைசேரிக்கான கட்டுநிதி கொடுப்பனவு | 41,227 | 546,202 |
| முற்பணக் கொடுப்பனவு | 6,193,260 | 4,324,016 |
| வைப்புக் கொடுப்பனவு | 2,181,714 | 1,328,981 |
| தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு **B)** | **190,188,598** | **1,133,862,740** |
| தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப்பாய்ச்சல் **(C )=(A)-(B)** | **5,871,043** | **9,331,486** |

| | | |
|---|---|---|
| **முதலீட்டு செயற்பாடுகளில் இருந்தான காசுப் பாய்ச்சல்** | | |
| வட்டி | - | - |
| பங்கிலாபம் | - | - |
| உரிமை இழந்த ஏற்பாடுகள் மற்றும் பௌதீக சொத்துக்களின் விற்பனை | - | - |
| உப கடன்கள் மீதான அறவீடுகள் | - | - |
| **மூலதன நடவடிக்ககைளிலிருந்து உருவான மொத்த காசு (D)** | **-** | **-** |
| ***கழி - பின்வருவனவற்றுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட காசு :*** | | |
| மூலதனச் சொத்து உருவாக்கம், கொள்வனவுகள் மற்றும் பிற முதலீட்டுக் கையகப்படுத்துதல்கள் | 5,871,043 | 9,331,486 |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்த காசு (E)** | **5,871,043** | **9,331,486** |
| **முதலீட்டு செயற்பாடகளுக்கு வழங்கப்பட்ட மொத்த காசு ( F)=(D)-(E)** | **(5,871,043)** | **(9,331,486)** |
| **தொழிற்பாடுகள் மற்றும் முதலீட்டு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப்பாய்ச்சல் (G)=( C) + (F)** | **(0)** | **(0)** |
| **நிதிச் செயற்பாடுகளில் இருந்தான காசுப்பாய்ச்சல்** | | |
| உள்ளூர் கடன்கள் | - | - |
| வெளிநாட்டுக்கடன்கள் | - | - |
| பெற்ற நன்கொடைகள் | - | - |
| **நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்த காசு (H)** | **-** | **-** |
| ***கழி பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:*** | | |
| உள்ளூர் கடன்கள் மீதான கொடுப்பனவுகள் | - | - |
| வெளிநாட்டு கடன்கள் மீதான கொடுப்பனவுகள் | - | - |
| **நிதிச் செயற்பாடுகளுக்குப் பகிர்ந்தளிக்கப் பட்ட மொத்த காசு (I)** | **-** | **-** |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்தான மேறிய காசுப் பாய்ச்சல் (J)=(H)-(I)** | **-** | **-** |
| **காசில் ஏற்பட்ட தேறிய அசைவு (K) = (G) + (J)** | **-** | **-** |
| **ஜனவரி 01ம் திகதியில் உள்ளவாறான ஆரம்ப காசு மீதி** | **-** | **-** |
| **டிசம்பர் 31ம் திகதியில் உள்ளவாறான இறுதிக் காசு மீதி** | **-** | **-** |

## 3.4 நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

1) **தயாரிப்பின் நோக்கம்**
நிதிக் கூற்றுக்கள், அரசாங்க நிதி ஒழுங்குவிதிகள் 150 மற்றும் 151 ஆகியவற்றுக்கும், 2025.12.17 ஆம் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டல்கள் இல.02/2025 இன் ஏற்பாடுகளுக்கம் இணங்க தயாரிக்கப்பட்டுள்ளது.

2) **அறிக்கையிடும் காலப் பகுதி**
இந்த நிதிநிலை அறிக்கைகளுக்கான அறிக்கைக் காலம் 2025 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் திகதி முதல் டிசம்பர் 31 ஆம் திகதி வரை ஆகும்.

3) **அளவீட்டின் அடிப்படை**

ஒருசில சொத்துக்களில் வரலாற்றுக் கிரய மீள் மதிப்பீட்டால் மேம்படுத்தப்பட்ட வரலாற்றுக் கிரயத்தின் அடிப்படையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் வேறு விதங்களில் காட்டப்படாத மேம்படுத்தப்பட்ட நிதியை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்பட்டுள்ளன.

நிதிக்கூற்றுக்களின் புள்ளிவிபரங்கள் இலங்கை ரூபாகளில் கிட்டிய ரூபாவில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது

4) **வருமானங்களை அடையாளம் காணுதல்**
பரிமாற்று மற்றும் பரிமாற்றம் அல்லாத வருமானங்கள் அவற்றின் வரியின் கால எல்லையை கருத்திற்கொள்ளாது, கணக்கு கால எல்லைக்குள் காசு கிடைப்பனவுக்கு அமைவாக அடையாளம் காணப்படுகின்றது

5) **சொத்துக்கள் பொறித் தொகுதி மற்றும் உபகரணங்களை அடையாளம் காணுதலும் அளவிடுதலும்**

சொத்துக்கள் தொடர்பில் எதிர்கால பொருளாதார நன்மை நிறுவனத்திற்கு கிடைக்கின்றது என்பதை உறுதிப்படுத்தியுள்ள சந்தர்ப்பத்திலும் அந்த சொத்துக்களை நம்பிக்கையான முறையில் அளவிடக் கூடியதாக இருப்பின், அந்த ஆதனங்கள் சொத்துக்கள், பொறித் தொகுதி மற்றும் உபகரணங்கள் என அடையாளம் காணப்படுகின்றது.
சொத்துக்கள், பொறித் தொகுதி மற்றும் உபகரணங்கள் செலவுக்கு அடையாளம் காணப்படுகின்ற அதேவேளையில் செலவு மாதிரி ஏற்புடையதாக இல்லாத சந்தர்ப்பத்தில் மீண்டும் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி பயன்படுத்தப்படுகின்றது.

6) **சொத்துக்கள், பொறித் தொகுதி மற்றும் உபகரணங்களின் ஒதுக்கம்**
இந்த ஒதுக்கக் கணக்கு சொத்துக்கள், பொறித் தொகுதி மற்றும் உபகரணங்கள் தொடர்பான கணக்கு ஆகும்.

7) **காசு மற்றும் காசுக்கு சமமானவை**

2025 டிசம்பர் 31 இல் உள்ளவாறு உள்நாட்டில் புழக்கத்திலுள்ள நாணயத்தாள் மற்றும் காசு ஆகியவற்றில் காசு மற்றும் காசுக்கு சமமானவை என்பவற்றை உள்ளடக்கி இருக்கும்.

*ஏதேனும் அறிக்கையிடல் நிறுவனத்திற்கு விசேடமான கொடுக்கல் வாங்கல்கள் உள்ள சந்தர்ப்பங்களில் அரச கணக்குகள் திரைக்களத்தின் அனுமதியுடன் அந்த தகவல்களை நிதிக் கூற்றுகளில் உரிய விதத்தில் சேர்த்துக்கொள்ள முடியும். அதேபோன்று "அறிக்கையிடல் அடிப்படை" இன் கீழ் அந்த விசேட கொடுக்கல் வாங்கல்களுக்குத் தேவையான வெளிப்படுத்தல்களை சேர்த்துக்கொள்ள முடியும்.

தமது அறிக்கையிடல் நிறுவனத்திற்கு உரிய கணக்கீட்டுக் கொள்கைகளை மாத்திரம் அறிக்கையிடல் அடிப்படையின் கீழ் வெளிப்படுத்துதல் வேண்டும்.

### 3.5 வருமானத்தை திரட்டுவதன் செயலாற்றுகை

**Rs.,000**

| வருமானக் குறியீடு | வருமானக் குறியீட்டின் விபரம் | வருமான மதிப்பீடு | | திரட்டப்பட்ட வருமானம் | |
|---|---|---|---|---|---|
| | | ஆரம்ப மதிப்பீடு | இறுதி மதிப்பீடு | தொகை (ரூபா) | இறுதி வருமான மதிப்பீட்டின் சதவீதமாக % |
| | | ஏற்புடையதல்ல | | | |

### 3.6 ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளை பயன்படுத்துவதன் செயலாற்றுகை

**Rs. ,000**

| ஏற்பாடுகளின் வகை | ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகள் | | உண்மை செலவினம் | பயன்படுத்தப்பட்ட ஏற்பாடுகள் முடிவுறுத்தப்பட்ட இறுதி ஏற்பாட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| | ஆரம்ப ஏற்பாடு | இறுதி ஏற்பாடு | | |
| மீண்டெழும் | 382,370,000 | 382,370,000 | 181,352,704 | 47.43 |
| மூலதனம் | 192,000,000 | 192,000,000 | 5,871,043 | 3.06 |

### 3.7 நி.ஒ. 208 இன் பிரகாரம், ஏனைய அமைச்சுகளின் /திணைக்களங்களின் பிரதிநிதி என்ற வகையில் இந்த திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட ஏற்பாடுகள்

**Rs. ,000**

| தொடர் இலக்கம் | ஏற்பாடுகளை பெற்ற அமைச்சுக்கள் / திணைக்களங்கள் | ஏற்பாட்டின் நோக்கம் | ஏற்பாடு | | உண்மைச் செலவினம் | பயன்படுத்தப்பட்ட ஏற்பாடுகள், முடிவுறுத்தப்பட்ட இறுதி ஏற்பாட்டின் சதவீதமாக % |
|---|---|---|---|---|---|---|
| | | | ஆரம்ப ஏற்பாடு | இறுதி ஏற்பாடு | | |
| | | | ஏற்புடையதல்ல | | | |

## 3.8 நிதி அல்லாத சொத்துக்களை அறிக்கையிடுவதன் செயலாற்றுகை

**Rs. ,000**

| வருமான குறியீடு | குறியீட்டின் விபரம் | 2025.12.31 இல் உள்ளவாறு சுற்றாய்வு அறிக்கைக்கு அமைவாக நிலுவை | 2025.12.31 இல் உள்ளவாறு நிதி நிலைமை அறிக்கைக்கு அமைவாக நிலுவை | முன்வரும் காலங்களில் கணக்கீடு செய்யப்பட உள்ளவை | முன்னேற்றத்தை சதவீதமாக அறிக்கையிடல் % |
|---|---|---|---|---|---|
| 9151 | கட்டிடம் மற்றும் கட்டமைப்பு | - | - | - | - |
| 9152 | இயந்திரசாதனம் | 58,387 | 58,387 | - | 100 |
| 9153 | காணி | - | - | - | - |
| 9154 | அருவமான சொத்துக்கள் | 2,667 | 2,667 | - | 100 |
| 9155 | உயிரியல் சொத்துக்கள் | - | - | - | - |
| 9160 | நடைபெறும் பணிகள் | - | - | - | - |
| 9180 | குத்தகை சொத்துக்கள் | - | - | - | - |

## 3.9 கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை

